# வார்டு எண் 176 இல் பொதுக்கழிப்பிடங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைகளில் நடக்க இயலும் தன்மை, மற்றும் தரைப்பரப்பு குப்பைகளின் அளவு ஆகியவற்றின் மீதான குடிமக்களின் அறிக்கை

## அறிமுகம்

பெரும்பாலான இந்திய நகரங்களில் உள்ள குடிமக்கள் பலதரப்பட்ட பொதுப்பிரச்னைகளுடன் வாழ்கிறார்கள்- மட்டமான குப்பை சேகரிப்பு, தண்ணீர் அடைத்துக்கொள்ளுதல், உடைந்த பக்கவாட்டு நடைபாதைகள், மற்றும் மோசமாக பராமரிக்கப்படும் பொதுக்கழிப்பிடங்கள் ஆகியவை குறிப்பிடும்படியான சிலவாகும். துரதிர்'டவசமாக, இந்தப் பிரச்னைகளின் தீவிரம் என்பது மட்டுமல்லாது, மேம்பாடுகளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்களையும் இதற்கு பதில் சொல்ல கடமைப்படுத்துதல் இன்னமும் சிரமமே ஆகும். இதன் ஒரு அங்கமாக, பொறுப்பில் இருப்பவர்களிடம், இந்த பிரச்னைகளுக்கான தகவல் அளிக்கப்பட்ட கோரிக்கைகளை வைக்க அனுமதி மற்றும் அத்துடன் அவர்களின் செயல்பாட்டை கண்காணிக்க அனுமதிப்பதற்கான சம்பந்தப்பட்ட தகவல்கள் கிடைக்கப்பெறுதலின் குறைபாடு ஆகியன இதற்கு காரணமாகும். பிரச்சனைகளை குடிமக்கள் அனுபவிக்கின்ற முறையில் விவரிக்கப்பட்ட வகையிலான தரவுகளுக்கும், அரசினால் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கும் இடையில் உண்மையிலேயே ஒரு இடைவெளி இருப்பது வார்டு மட்டத்தில் இருக்கிறது என்பதுவும் உண்மைதான். ஒட்டுமொத்த அளவில் உள்;ர் பிரச்சனைகளை குடிமக்கள் புரிந்து கொள்ள, குறுக்கீடுகளை முன்னுரிமைப்படுத்தும், மாற்றத்தைச் செய்வதற்காக தேர்வு செய்யப்பட்ட உள்;ர் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்களை பொறுப்பேற்க செய்ய உதவுவதற்கு தேவைப்படும் தரவுகள் அவசியமாகிறது.

குடிமக்களின் குரல் கேட்கப்படுவதற்காக, உள்;ர் கவுன்சிலர் தேர்தல்கள் ஒரு சந்தர்ப்பத்தினை அளித்தது என்ற நம்பிக்கையில், தெள்ளத்தெளிவான சென்னையுடன், எத்திராஜ் கல்லூரி, சென்னை கிறித்தவக் கல்லூரி, சுற்றுச்சூழல் கல்விக்கான மையம்(ஊநுநு), போக்குவரத்து மற்றும் மேம்பாட்டுக்கொள்கை நிறுவனம்(ஐவுனூ), சென்னை ரோட்டராக்ட் கிளப், சுற்றுச்சூழலுக்கான விழிப்புணர்வு மற்றும் பொறுப்புணர்வு சிரத்தை(ஊயுசுநு) நமது கடற்கரைகளை மீட்டெடுங்கள்(சுழுடீ) மற்றும் சென்னை சமூகப்பணிப் பள்ளி(ஆளுளுறு) ஆகியவை இணைந்து வார்டு 176 இல் பொதுமக்களின் சுகாதார நிலைமை, பாதசாரிகளின் நடக்கும் இயல்தன்மை சூழல், மற்றும் தரைப்பரப்பு குப்பைகளின் அளவு மற்றும் காலி இடத்தை ஆக்கிரமிக்கும் குவிப்பு ஆகியவை பற்றிய தகவல்களை உருவாக்கிய, குடிமக்களால் உந்தப்பட்ட குறுக்கீட்டினை வார்டு மட்டத்தில் செயல்படுத்தியது. திரட்டிய தரவுகளின் அடிப்படையில் வார்டில் இருக்கும் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான உறுதி பூணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட கவுன்சிலர் வேட்பாளர்கள் பங்கெடுத்துக்கொண்ட ஒரு பொதுக்கூட்டத்தில் இந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

## உள்;ர் நகர்ப்புற சேவையை கொண்டு சேர்ப்பதை மேம்படுத்த வார்டு கவுன்சிலர்கள் என்ன செய்ய முடியும்.?

பல எண்ணிக்கையிலான அரசுத்துறைகள் மற்றும் ஆணையங்கள் மீது உள்;ர் நகர்ப்புற சேவைகளுக்கான பொறுப்பு விழுகின்றது. பிராந்திய மட்டத்திலான வார்டு கமிட்டி மற்றும் மாநகராட்சி கூட்டங்களில் மாதந்தோறும் கொண்டுவரப்படக்கூடிய தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் பல பிரச்னைகளை நேரடியாக தீர்க்க தங்கள் வார்டில் குடியிருப்போரின் உள்;ர் பிரதிநிதிகளாக இருக்கும் வார்டு கவுன்சிலர்கள் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு கவுன்சிலரும் ”வார்டு மேம்பாட்டு நிதி” என அறியப்பட்ட அதிகாரத்தை பிரயோகப்படுத்தும் வகையிலான நிதி ஒதுக்கப்பட்டு, உள்;ர்க் கட்டமைப்பினை மேம்படுத்த உதவும் வகையில் 2007 ஆம் ஆண்டு ரூ. 7 லட்சத்திலிருந்து 2008இல் ரூ.15 லட்சமாகவும், பின்னர் 2009 இல் ரூ. 25 லட்சமாகவும் படிப்படியாக உயர்ந்துள்ளது.[1]

## இந்தத் தரவுகள் எப்படி பயன்மிகுந்ததாக இருக்கும்?

பங்கேற்றிருக்கும் எங்களுடைய எட்டு கல்வியகங்களில் இருந்து வரும் மாணவர்களாக இருக்கும் தன்னார்வலர்களினால், சுலபமான பொருத்திப்பார்த்தல், மற்றும் சர்வே நுட்பங்களைப் பயன்படுத்தி இந்தத் தரவுகள் திரட்டப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்னர் எவ்வாறு இருக்கும் எனவும் காண்பிக்கப்பட்டன. பொது சுகாதாரம், நடந்து செல்ல இயலும் தன்மை மற்றும் குப்பைகள் சம்பந்தமாக தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளின் மிகவும் முழுமையான புரிதலை இந்தத் தகவல்கள் குடியிருப்போருக்கு அளிக்கின்றன. மிக முக்கியமாக, தங்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட உள்;ர் பிரதநிதிகளின் தகவல் அளிக்கப்பட்ட அதிகமான மற்றும் சிறந்த கோரிக்கைகளை குடியிருப்போர் வைக்க உதவுவதன் மூலம், வார்டினுள் நிலைமைகளை மேம்படுத்த ஒரு உறுதியான உத்வேகத்தை அளிக்க இந்தத் தகவல்கள் பயன்படுத்தப்படலாம். இறுதியாக, கவுன்சிலர் மற்றும் உள்;ர் அதிகாரியின் செயல்பாட்டினை அளவிடுவதற்கு இது ஒரு அடித்தளம் அமைக்கிறது வார்டினுள் மேம்பாடுகளைக் கண்காணிக்க இந்தப்பயிற்சியானது சுழற்சி முறையில் திரும்பத் திரும்ப செய்யப்படலாம். தரவுகள் சேகரிப்பின்போது செய்யப்பட்ட தரவு பகுப்பாய்வு மற்றும் கூர்நோக்கல்களின் அடிப்படையில் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான இலக்குவைத்த பரிந்துரைகளை பின் வரும் பிரிவு அளிக்கிறது. பயன்படுத்தப்பட்ட வழிமுறைகளின் ஒரு சிறு விளக்கத்தினையும் இது அளிக்கிறது.

சென்னை மாநகராட்சியின் எல்லை விரிவாக்கத்தினை எதிர்கொள்ள 2011 ஆம் ஆண்டு தேர்தல்கள் சென்னையின் வார்டுகளின் எண்ணிக்கை 155 லிருந்து 200 ஆக உயரக்கண்டது. எனினும், புதிய வார்டுகளின் மிகச்சரியான எல்லைகள் செப்டம்பர் 22, 2011 அன்றுதான்(தேர்தல்களுக்கு ஒரு மாதத்திற்கும் குறைவான கால அவகாசத்தில்) பொதுமக்களுக்கு கிடைக்கப்பெறச் செய்யப்பட்டன. செப்டம்பர் இறுதியில் தரவுகளின் சேகரிப்பு துவங்கியதால் பழைய வார்டின்(வார்டு 152)

---

1 மேலும் தகவல்களுக்கு தயவு செய்து எங்களுடைய ”நகராட்சி கவுன்சிலர்கள்” எனும் பிரச்னையின் சுருக்கத்தினை பார்க்கவும்: பங்குகள், பொறுப்புக்கள் மற்றும் செயல்பாடு ாவவி:.'.'.றறற.வசயளெியசநவெஉாநயெெை.உழஅ.'.சநளயசஉா.'.அரஙெைஉனியட-நடநஉ வழைளெ.'ிரடிடஉை யவழைளெ.'. இல் கிடைக்கப்பெறும்.

நிலவரைபடம் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, 176 ஆம் வார்டின்(152ஆம் வார்டின் அதே எல்லையை கொண்டு கூடுதலாக மேற்குப்பகுதியின் ஒரு கூடுதல் பரப்புடன் உள்ளது) தரவுகள் சேகரிப்பின் பகுதி முழுமையற்றதாக உள்ளது.




நிலவரைபடம் 1: 176 ஆம் வார்டினை அமைக்க 152 ஆம் வார்டில் சேர்க்கப்பட்ட பகுதி, இது சர்வே செய்யப்படவில்லை(சிவப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளது)

## 1. 176 ஆம் வார்டின் பொது சுகாதார நிலைமை




நிலவரைபடம் 2: 176 ஆம் வார்டில் பயன்படுத்தக்கூடிய மற்றும் பயன்படுத்த இயலாத கழிப்பிடங்கள்

### வழிமுறை:

பயன்படுத்தக்கூடிய மற்றும் பயன்படுத்த இயலாத கழிப்பிடங்கள் என வரையறுக்க நான்கு காரணிகள் பயன்படுத்தப்பட்டன:

- தண்ணீர் வரும் குழாய்கள் அல்லது வேறொரு நீர் ஆதாரத்தை கழிப்பறை கொண்டிருந்ததா?
- எரியக்கூடிய விளக்குகளை கழிப்பறை கொண்டிருந்ததா?
- கண்ணால் பார்க்கக்கூடிய கசிவுகள் அல்லது அடைப்புகள் இருந்தனவா?

- கழிப்பறை தூய்மையாக இருந்ததா?
நான்கு காரணிகளில் ஏதேனும் ஒன்றினை தவறவிடுவது கழிப்பறை பயன்படுத்த இயலாதது என்று வரையறுக்கப்படுகிறது

### பகுப்பாய்வு மற்றும் கூர்நோக்கல்கள்:

1. எங்களது காரணிகளின் அடிப்படையில், மொத்தம் உள்ள 11 கழிப்பறைகளில், பெசன்ட் நகர் 6 ஆவது அவென்யூ மற்றும் கக்கன் காலனியில் உள்ள 2 கழிப்பறைகள் மட்டுமே பயன்டுத்தக்கூடியதாக எடுத்துக்கொள்ளப்பட்டன.
2. ராமசாமி அவென்யூ சந்திப்பு 31 ஆவது குறுக்குத்தெருவில் இருக்கும் ஆண்களுக்கான கழிப்பறை பூட்டப்பட்டிருந்தது.
3. 2004 ஆம் ஆண்டு சுனாமியினால் சேதமடைந்ததில் இருந்து ஊரூர் குப்பம் கழிப்பறை சரியாக பழுது பார்க்கப்படவில்லை.
4. பல கழிப்பறைகளிலும் விளக்குகள் இல்லாதிருப்பது ஒரு தீவிரமான பிரச்னையாக உள்ளது.

| பகுதியின் பெயர் | வகைப்படுத்தல் |
|---|---|
| சாஸ்திரி நகர் 7 வது சந்து | பயன்படுத்த இயலாதது |
| அடையார் டி டி சாலை | பயன்படுத்த இயலாதது |
| mUzhr;ryk;--சேரி | பயன்படுத்த இயலாதது |
| ஊரூர் குப்பம் | பயன்படுத்த இயலாதது |
| ஆல்க்காட் குப்பம் | பயன்படுத்த இயலாதது |
| வசந்த் பிரஸ் அருகில் இருக்கும் ராமசாமி கார்டன் | பயன்படுத்த இயலாதது |
| 6 ஆவது அவென்யூ | பயன்படுத்தக் கூடியது |
| பெசன்ட் அவென்யூ | பயன்படுத்த இயலாதது |
| ராமசாமி அவென்யூ சந்திப்பு 31 ஆவது குறுக்குத் தெரு | பயன்படுத்த இயலாதது |
| கக்கன் காலனி | பயன்படுத்த இயலாதது |
| ராமசாமி கார்டன் | பயன்படுத்த இயலாதது |

அட்டவணை 1: 176 ஆம் வார்டின் கழிப்பறைகள் வகைப்படுத்தல்

## 2. பாதசாரிகள் நடந்து செல்வதற்கான சூழல்




நில வரைபடம் 3: வார்டு 176 இல் நடந்து செல்லும் இயல் தன்மை அடிப்படையில் சாலைகளின் தரவரிசைப்படுத்தல்

### வழிமுறை:

ஜவுனீயினால் உருவாக்கப்பட்ட சர்வே வழிமுறையின் அடிப்படையில் பின் வரும் மூன்று வகைப்பாடுகளில் 20 சாலைகள் தேர்வு செய்யப்பட்டு தரவரிசைப்படுத்தப்பட்டன:

- சௌகரியம்
- பாதுகாப்பு
- பாதசாரியின் வசதிகள்

ஒவ்வொரு வகைப்பாடும் 10 கேள்விகளைக் கொண்டிருந்தன மற்றும் ஒவ்வொரு கேள்வியும் ஒற்றைப்புள்ளி திட்டத்தின் அடிப்படையில் மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டன.(உதாரணத்திற்கு-இரவு நேரங்களில் வெளிச்சம் போதுமானதாக இருந்ததா? ஆம்- 1, இல்லை-0). மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் நடந்து செல்ல இயல்வதில் சாலை மிக உயர்வானதாக வகைப்படுத்தப்பட்டவை(70மூ க்கும் மேல்), ஓரளவு நடந்து செல்ல இயல்பவை(45மூ - 70மூ க்கு இடையில்), அல்லது நடந்து செல்ல மோசமானதாக இருந்தவை(45மூ க்கும் குறைவாக).

## பகுப்பாய்வு மற்றும் கூர்நோக்கல்கள்:

1. இந்த அளவுகோல்களின்படி 3 வீதிகள் மட்டுமே 70மூ மதிப்பெண்களைப் பெற்று, பெரும்பாலான வீதிகள் சராசரியாக 51மூ மதிப்பெண்களை மட்டுமே பெற்றன
2. உள்ளடங்கிய குடியிருப்பு வீதிகளாக இருக்கும் 16 ஆவது குறுக்கு வீதி மற்றும் 17 ஆவது குறுக்கு வீதி ஆகிய இரண்டும் மற்றும் துர்கா தேஃமுக் வீதி ஆகியவை சிறந்த சாலைகளாக இருந்தன.
3. 7 ஆவது அவென்யூ மற்றும் 1 ஆவது அவென்யூ ஆகிய இரண்டு வீதிகளும் மோசமான சாலைகளாக இருந்து இரண்டுமே உடனடி கவனம் தேவைப்பட்டனவாக இருந்தன.

| சாலையின் பெயர் | பாதசாரிகளின் வசதிக்கான தரப்படுத்தல் | | | | |
|---|---|---|---|---|---|
| | வசதி | பாதுகாப்பு | பாதசாரிகளின் வசதி | மொத்தம் | Rjtpfpj kjpg;G |
| பெசன்ட் அவென்யூ(43) | 6 | 3 | 9 | 18 | 60மூ |
| வசந்தா பிரஸ் சாலை(142,144) | 6 | 6 | 6 | 18 | 60மூ |
| எல் பி சாலை(83) | 4 | 8 | 4 | 16 | 53மூ |
| 7 ஆவது அவென்யூ வை நோக்கி செல்லும் எல் பி சாலை(83 | 2 | 6 | 5 | 13 | 43மூ |
| துர்கா தேஸ்முக்(133) | 8 | 7 | 6 | 21 | 70மூ |
| சலவையாளர் தெரு(56,74) | 5 | 4 | 4 | 13 | 43மூ |
| 1 ஆவது அவென்யூ(41,82,80) | 3 | 2 | 5 | 10 | 33மூ |
| 2 ஆவது அவென்யூ(40) | 3 | 5 | 3 | 11 | 37மூ |
| 3 ஆவது அவென்யூ(42) | 3 | 4 | 7 | 14 | 47மூ |
| 5 ஆவது அவென்யூ | 5 | 3 | 4 | 12 | 40மூ |
| 7 ஆவது அவென்யூ(2) | 3 | 3 | 3 | 9 | 30மூ |
| 1 ஆவது பிரதான சாலைசாஸ்திரி நகர்(65) | 6 | 5 | 3 | 14 | 47மூ |
| 1 ஆவது பிரதான சாலை பெசன்ட் நகர்(52) | 5 | 5 | 2 | 12 | 40மூ |
| 3 ஆவது பிரதான சாலை(16) | 7 | 8 | 3 | 18 | 60மூ |
| 6 ஆவது குறுக்குத் தெரு | 8 | 4 | 6 | 18 | 60மூ |
| 7 ஆவது குறுக்குத் தெரு(90,69,70,73) | 6 | 6 | 4 | 16 | 53மூ |
| 5 மற்றும் 8 ஆவது குறுக்குத் தெரு(87,62,61) | 5 | 7 | 2 | 14 | 47மூ |
| 11 ஆவது குறுக்குத் தெரு | 7 | 8 | 4 | 19 | 63மூ |
| 16 ஆவது குறுக்குத் தெரு | 8 | 8 | 7 | 23 | 77மூ |
| 17 ஆவது குறுக்குத் தெரு | 9 | 5 | 6 | 20 | 67மூ |

அட்டவணை 2: 176 ஆவது வார்டு சாலைகளின் தனித்தனி சதவீதத் தரப்படுத்தல்

### 3. தரைப்பரப்பு குப்பைகளின் அளவு




நிலவரைபடம் 4:வார்டு 176 இல் சிறிய நடுத்தர மற்றும் பெரிய குப்பைமேடுகள்




நிலவரைபடம் 5: பயன்படுத்தக் கூடிய மற்றும் பயன்படுத்த இயலாத குப்பைத்தொட்டிகள் நிலவரைபடம்




நிலவரைபடம் 6: சிறிய , நடுத்தர மற்றும் பெரிய குப்பை மேடுகளின் அடிப்படையிலான குப்பை அடர்வினை காட்டும் நிலவரைபடம்

**வழிமுறை:**
வார்டில் இருக்கும் தரைப்பரப்பு குப்பைகள் தொடர்பான பிரச்னைகள் மற்றும் அளவினை மதிப்பீடு செய்ய பின் வரும் தரவுகள் சேகரிக்கப்பட்டன:
- சிறிய, நடுத்தர மற்றும் பெரிய குப்பை மேடுகள்(குப்பைகளை உள்வாங்கிக்கொள்ளும் தொட்டிகள் அல்லாத குப்பைகளின் குவிப்பு)
- குப்பைத்தொட்டி இருக்குமிடங்கள்
- நிறைந்து வழியும் அல்லது உடைந்த குப்பைத்தொட்டிகள்(பயன்படுத்த இயலாதவை என வகைப்படுத்தப்பட்டவை)
- குப்பைகள் மற்றும் கழிவுநீர் கலக்கும் பகுதிகள்[2]

குப்பை கொட்டும் இடங்களின் அடிப்படையில், வார்டில் பிரச்னை அதிகமாக உள்ள இடங்களைப் பார்வையிடும் வகையில் வெப்ப அடர்த்திப் புள்ளிகள் கொண்ட நில வரைபடம் உருவாக்கப்பட்டது. இது அதிகபட்ச குப்பையின் அளவினை கொண்டிருக்கும் பகுதிகளை இடம் காண உதவியது.

பகுப்பாய்வு மற்றும் கூர்நோக்கல்கள்:
1. கண்டறியப்பட்ட மொத்த குப்பை கொட்டும் இடங்கள்:
- சிறியவை- 244
- நடுத்தரம்- 211
- பெரியவை- 233
- குப்பை கலக்கும் பகுதிகள்- 125
- கழிவுநீர் கலக்கும் பகுதிகள்- 38
2. குப்பைத்தொட்டிகளின் மொத்த எண்ணிக்கை- 111
3. மொத்த குப்பைத்தொட்டிகளில் குறிப்பிடத்தக்க(34%) எண்ணிக்கையிலானவை(111 இல் 40) உடைந்திருந்தன, கவிழ்ந்திருந்தன அல்லது நிறைந்து வழிந்தன.
4. இருந்த அதிக எண்ணிக்கையிலான குப்பை கொட்டும் இடங்கள் பெரிதாக இருந்தன.
5. கழிவுநீர் தேங்கலாக இருந்த பகுதிகளில் அடங்குபவை 4 சாலைகள் ஆகும்(சாஸ்திரி நகர் முதல் பிரதான வீதி, வசந்தா பிரஸ் வடக்கு சாலை, ராமசாமிகார்டன் தெரு, உரூர்-ஆல்க்காட் குப்பம்) சாலை.
6. குப்பை தேக்கமாகிய பகுதிகளாக இருந்த 5 சாலைகள் 53% அளவினை கொண்டுள்ளது(பெசன்ட் நகர் 33 ஆம் சாலை, பெசன்ட் நகர் 7 ஆம் அவென்யூ, சாஸ்திரி நகர் 1 ஆவது பிரதான சாலை, ராமசாமி அவென்யூ).
7. பெரிய அளவிலான குப்பைமேடுகளாக இருந்த 8 சாலைகள் 53% அளவினை கொண்டுள்ளது( பெசன்ட் நகர் 7 ஆம் அவென்யூ, ஆல்க்காட் குப்பம், அருணச்சலபுரம் பிரதான சலை, அருணாச்சலபுரம் 11 வது வீதி, சாஸ்திரி நகர்

[2] தேக்கமடையும் பகுதி“ என்பது குப்பைகள் மற்றும் கழிவுநீர் இருப்பதினால் எதிர்மறையாக பாதிக்கப்பட்ட பகுதிகளை குறிப்பது. உதாரணத்திற்கு, குப்பைகள் மற்றும் கழிவுநீர் தேக்கம் காரணமாக பாதசாரிகளுக்கு பக்க வாட்டு நடைபாதையை எட்டுவதற்கு தடுப்பாக இருத்தல்.

1 ஆவது வீதி, சாஸ்திரி நகர் 11 ஆவது குறுக்கு வீதி, ராமசாமி அவென்யூ, சாஸ்திரி நகர் 31 ஆவது குறுக்கு வீதி.
8. 46 சாலைகளில் குப்பைத்தொட்டிகள் இருக்கவே இல்லை.
9. உரூர் மற்றும் ஆல்க்காட் குப்பத்தில் இருந்த அனைத்து 8 குப்பைத்தொட்டிகளும் சேதமடைந்திருந்தன அல்லது நிறைந்து வழிந்தன.
10. ஒவ்வொரு 10 குப்பை கொட்டும் இடத்திற்கும் ஒரே ஒரு செயல்பாடு கொண்ட குப்பை தொட்டி மட்டுமே உள்ளது..

### உடனடி கவனம் தேவைப்பட்ட சாலைகள்.ஃ.பகுதிகள்:

1.சிறிய, 17 நடுத்தர மற்றும் 12 பெரிய குப்பை மேடுகளைக் கொண்டிருந்த நீண்ட சாலையான பெசன்ட் நகர் 7 ஆவது அவென்யூ.
2. ராமசாமி அவென்யூ சிறிதாக இருப்பினும் 2 சிறிய, 4 நடுத்தர மற்றும் 10 பெரிய குப்பை மேடுகளையும் 7 குப்பை கலக்கும் பகுதிகளையும் கொண்டிருந்தது.
3. சாஸ்திரி நகர் 8 ஆவது குறுக்குத் தெரு - சிறிய சாலையாக இருப்பினும் சாலையின் அளவினைப் பொருத்தவரையில் அதிக அளவிலான குப்பை மேடுகளை கொண்டிருந்தது-2 சிறிய, 3 நடுத்தர 6 பெரிய மற்றும் 3 குப்பை தேக்கமாகும் பகுதிகளுடன் இருந்தது..
4. சாஸ்திரி நகர் 1 ஆவது பிரதான சாலை - அதிக எண்ணிக்கையிலான குப்பை மேடுகள் - 14 குப்பை தேக்கமாகும் மற்றும் கழிவு நீர் தேங்கும் பகுதிகள் அல்லாமல் 5 சிறிய, 3 நடுத்தர மற்றும் 9 பெரிய குப்பை மேடுகளை கொணடிருந்தது.
5. சாஸ்திரி நகர் 1 ஆவது அவென்யூ - 12 சிறிய, 6 நடுத்தர, 2 பெரிய குப்பைமேடுகள் மற்றும் 2 குப்பை தேக்கமாகும் பகுதிகளை கொண்டிருந்தது
6. அருணச்சலபுரம் பிரதான சாலை சிறிதாக இருப்பினும் அதிக எண்ணிக்கையிலான குப்பை மேடுகளைக் கொண்டிருந்தது- 9 நடுத்தரமானவை மற்றும் 12 பெரியவை.
7. உரூர்-ஆல்க்காட் குப்பத்தின் சாலைகள் மொத்தத்தில் 13 சிறிய, 30 நடுத்தர மற்றும் 47 பெரிய குப்பை மேடுகளை கொண்டிருந்தன.

பெரிய குப்பை மேடுகளின் அடர்த்திப்புள்ளிகளை பார்வையிட்டதன் மூலம் மட்டுமே, பின் வரும் நில வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடியாக வார்டினுள் உடனடி கவனம் தேவைப்படும் இடங்களை இடம் காண முடிகிறது. இந்தப் பகுப்பாய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட பகுதிகள், வார்டின் 11 அறிவிக்கப்பட்ட சேரிகளுள் 10, இந்தப்பகுதிகளில் அல்லது அதன் மிக அருகாமையில் இருப்பவற்றுடன் பொருந்துகின்றன. சென்னை மாநகராட்சியானது, வார்டின் மற்ற பகுதிகளைக்காட்டிலும் ஏழ்மையான பகுதிகளில் மிக மோசமாக சேவையாற்றுகின்றன என்பதுடன், இந்த வார்டினுள் திடக்கழிவு மேலாண்மை பொருத்தவரை நியாயமற்ற சேவை அளிப்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

### குடிமக்களைக் கண்காணிப்பதில் ஈடுபடுங்கள்!

தரவுகள் சேகரிப்பதில் சாதாரண குடிமக்களும் பங்கேற்க முடிகின்ற வகையில் இந்தத் தகவல்களைப் பெறுவதற்கு கூடிய மட்டில் இந்த வழிமுறை எளிதானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த செயல்முறைப் பயிற்சியினை ஒவ்வொரு 6 மாதமும் திரும்பத் திரும்ப செய்வதன் மூலம் உள்;ர் நகர்ப்புற சேவை அளிப்பில் மேம்பாட்டினை பின் தொடர முடியும், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் கவுன்சிலர்களின் செயல்பாட்டினை அளவிடவும் பின் தொடரவும் பயன்படுத்தலாம்.

### எங்களைத் தொடர்பு கொள்ளவும்!

மேலும் அதிகமாக தெரிந்து கொள்ள வேண்டுமா? பெரிய அளவில் ஈடுபட விருப்பமா? எங்கள் வழிமுறை பற்றிய கேள்விகள் உள்ளனவா? அப்படியானால் எங்களை அழையுங்கள்! எங்களுடைய தரைவழி தொலைபேசியான 44.6668.7264 இல் எங்களை அணுக இயலும் அல்லது சித்தார்த் ஹண்டே, ஆராய்ச்சியாளர், ‘தெள்ளத்தெளிவான சென்னை’ அவர்களை 98402.95081. இல் அழைக்கவும்.
.